


இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (23.1.2024) நேரு விளையாட்டரங்கில் நடைபெறும் 'கேலோ இந்தியா' இளைஞர் விளையாட்டு போட்டிகளில் 110 மீ தடை தாண்டி ஓட்டத்தில் (hurdles) வெற்றிபெற்ற வீரர் பி.விஷ்ணுவுக்கு வாழ்த்துத் தெரிவித்தார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தடகள சங்கத்தின் வாழ்நாள் தலைவர் வால்டர் தேவாரம் (ஓய்வு) ஆகியோர் உடனிருந்தனர்.

# திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் வீர வணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

## திரளாக கலந்து கொள்ள மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பூர், ஜன. 25 -

திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இந்தித் திணிப்புக்கு எதிராக, தாய்மொழியாம் தமிழை காத்திடும் போரில் தம் இன்னுயிர் ஈந்து தாய் மொழி காத்த தியாகிகளின் ஈகத்தை, தியாகத்தை நினைவு கூர்ந்து போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25ம் தேதி மொழிப்போர்த் தியாகிகள் தினம் கடைப்பிடிக்கப் படுகிறது.

நாம் விரும்பாத ஒரு மொழியை எதிர்த்துப் போரிட்டு, ஐயகோ நம்மிடம் இல்லாது மறைந்து போன நடராசனின் வீர வாழ்வை, நாங்களும் பின் பற்றுவோம் என்று உறுதி கொள்வீர்களா? என்ற பேரறிஞர் அண்ணாவின் கூற்றின் படி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழகத்தின் மாணவர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் ஆண்டுதோறும் நடைபெறும் வீர வணக்க நாள் பொதுக்கூட்டங்கள் நம் திருப்பூர் வடக்கு மாவட்டத்தில், இன்று (ஜனவரி 25ம் நாள்) திருப்பூர் மற்றும் பல்லடம் ஆகிய இடங்களில் மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. ஆகிய எனது தலைமையில் நடைபெற உள்ளது..

இதில் திருப்பூரில் இடுவம்பாளையம், காமாட்சியம்மன் கோவில் திடலில் நடைபெறுகிற வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கழக சட்டதிட்ட திருத்தக் குழு செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் இரா. கிரிராஜன் எம்.பி, திருப்பூர் வடக்கு தொகுதி தேர்தல் பொறுப்பாளர் திராவிட மணி, பல்லடம் நகரத்தில் நடைபெறுகிற வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் ஜோன்ஸ் ரூசோ, போர் முரசு கதிரவன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை யாற்ற உள்ளனர்.

அதுசமயம் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்றும் கழக மூத்த முன்னோடிகள், அனைவரும் எழுச்சியோடு பெரும் திரளாக பங்கேற்று சிறப்பான முறையில் நடத்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவு இல்லத்தில் மார்பளவு வெண்கல சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில், காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார். நாமக்கல் நகராட்சி, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவு இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.





